நாள் 20.08.2024

அசல் வழக்கு எண் 38/2018

வா சா 1கதிரவன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்துக்கள் பொறுத்து பாகம் பிரிககப்படாத நிலையில் தான் இவ்வழக்கை தாக்கல்செய்துள்ளேன் என்றால்இல்லை. பாகம் பிரித்தபிறகு தான் வழக்கு தாக்கல்செய்துள்ளேன். எந்த வருடத்தில் எந்தெந்த சொத்துக்கள் எந்தெந்த ஆவணத்தின் படி பாகம் பிரிக்கப்பட்டது என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஊர் பெரியோர் முன்னிலையில் பிரித்தார்கள். ஆவணம் உண்டா என்று எனக்கு தெரியவில்லை. எந்த வருடம் பிரிக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் 1973-1974 ல் பிரித்தார்கள். 1973-1974 என்ன ஆவணத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டது என்றால் பாகம்பிரிவினை அடிப்படையில் இருவருக்கும் தனித்தனியே பிரித்து கொடுத்துவிட்டார்கள். 1973-1974 ல் பாகம் பிரித்ததற்கு பாக பத்திரம் உள்ளதா எனறால் தனியாக ஆவணம் இலலை கிராம பெரியோர்கள் முன்னிலையில் பிரித்தார்கள். பாகம் பிரித்ததாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.80/2000 ல் வழக்கு சொதது சம்மந்தமாக பாகம் பிரிக்கப்பட்டது என எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். நான் சொல்வதை போன்று 1953 மற்றும் 1954 வருடத்திய பத்திரங்கள் பொறுத்து வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ எநத் பாகமும் ஏறபடவிலலைலஎன்றால் சரியல்ல வாய்மொழியாக ஏற்பட்டது. தங்கராஜ் எந்த நாட்டில் உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் மலேசியாவில் இருப்பதாக எனது அப்பா சொல்லி தெரியும். எனது பிராதில் தங்கராஜ் இலங்கையில்

இருப்பதாக சொல்லியிருந்தால் அது சரியா தவறா என்றால் தவறுதான் மலேசியாவில் இருப்பதாக எனது அப்பா சொன்னார். தங்கராஜ் மலோசியாவில் இருக்கும்போது குடுமப சொத்து சம்மந்தமாக பாகம்பிரிக்கப்படவில்லை எனற் கடிதம் போட்டுள்ளார் என்றால் தெரியாது எனக்கு வரவில்லை. தங்கராஜ் வழக்கு பிரதிவாதிகளு தாவா சொத்துக்கள் பொறுத்து அவருக்கு பாகம் தரவேண்டுமென்று கடிதம் அனுப்பியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து தங்கராஜீக்கு பாதி பாகம் உண்டு என்று சொன்னால் இல்லை. 1970 ல் எனது அபபாவிடம் பணம் ெ பறறுவிடடு வாய்மொழியாக எனது அப்பாவை அனுபவம செய்யசொலலிவிட்டாா. 2018 ல் தங்கராஜ் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றம் சொத்துக்கள் பொறுத்து பாகம் பிரிக்க கேட்டு குடும்ப உறுப்பனிர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. சாட்சி தன்னிட்சையாக எனது அப்பாவிடம் தங்கராஜ் பணம் பெறவில்லை. சுடலைதிராவிடர் தான் தனது அப்பாவிடம் பணம் பெற்றதாக கூறினார். சுடலைதிராவிடர் இறக்கும்போது என்ன வயது என்றால் எனக்கு தெரியாது. அவர் எங்கு வைத்து இறந்தார் என்றால் அதுவும் தெரியாது. அவருடன் உடன்பிறந்த சகோதர சகோரரிகள் உள்ள விவரம்எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுடலைதிராவிடம் வாய்மொழியாகஎனது அப்பாவிற்கு சொத்துக்கள் கொடுத்தார் என்று வழகக்றிாகக பொய்யாக சொல்லுகிறேன் எனறால் சரியல்ல. எனது அப்பா சொல்லிதான் தெரியும். என்னுடைய தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் ஆகஸ்டு 15, 1996 ல் இறந்தார். எனது அப்பாவின் வாரிசு சான்றதிழ் வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். இன்றைய தேதிவரை பாகம் பிரிக்கப்படாத வழகு்கு சொத்திற்கு பட்டா கூட்டுப்பட்டாவாக

உள்ளது என்றால் இல்லை எனது அப்பா பெயரில்தான் உள்ளது. பாக்ம பிரிக்கப்படாத சொத்திற்கு எனது தகப்பனார் பெயரில் மோசடியாக பட்டா பெறப்பட்டது என்று சொன்னால சரியல்ல. பாகம் பிரிககப்படாத சொத்தை பொறு்துது எனது தக்பபனார் காலத்திறகு பின்பு நாங்கள் ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளோம் எனறால்சரியல்ல. எனது அப்பா பெயரில் பட்டா இருந்ததால் வாரிசு அடிப்படையில் எங்கள் பெயருக்கு மாற்றியுள்ளோம். எஙகளுக்குள் நாங்கள் என்ன ஆவணம் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் செட்டில்மெணட் ஆவணம் போட்டுள்ளோம். எனது அம்மாவும், அக்காவும் விடுதலை ஆவணம் கொடுத்துள்ளார். எனக்கு யார் விடுதலை ஆவணம் எழுதி தந்தார் என்றால் எனது அம்மாவும், அக்காவும், விடுதலை ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல்செய்து்ளேள் என்றால் இல்லை. மோசடியாக ஆவணத்தை உற்பத்தி செய்ததால் தான் வழக்கில் தாக்கல்செய்யவி்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களின் அடிப்படையில் தாவாசொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையோ அனுபமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிராதில் நான் பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் மகன், மகள் இடைஞ்சல் செய்யதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இடைஞ்சல் செய்ததாக நான் சொல்லும் நபர்களை இவ்வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சித்தப்பாவை சேர்த்திருக்கிறேன். நான் சொல்வதை போன்று எந்த இடைஞுசலும் ஏற்படவில்லை என்றும், நாங்கள் தான் பிரதிவாதிக்கு இடையூறு கொடுததால் பிரதிவாதியின் வாரிசுகள் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்று சொன்னால் இல்லை. அவ்வாறு புகார் கொடுத்து எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றாால் இல்லை நாங்கள் தான் அவர்கள் மீது புகார் கொடுத்தோம். குற்ற எண்.4/18 நான்

கொடுத்த புகாரின் பெயரில் பதியப்பபட்டது என்று சொன்னால் சரியாக ஞாபகமில்லை. கூட்டு அனுபவத்தில் உள்ள சொத்துக்களை நானும், எனது சகேதாரரசகோதரிகளும் அபகரிக்கும்நோக்கத்துடன் செயல்பட்டு அதனை மறைக்கும் நோக்கத்துடன் இவ்வழககை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து பிரதிவாதி எக்காலத்திலும் இடைஞ்சல் செய்யவிலலை என்றால் சரியல்ல வழக்கு சொத்தில் உள்ள கிணற்றில் மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள கிணற்றில் என்ன மோட்டாா உள்ளது என்றால் மோட்டார் எதுவுமில்லை. வழக்கு சொத்து நஞ்சையா புஞ்சையா என்றால் 2ம் இருக்கிறது. நஞ்சை இடத்தில் பயிா போடபப்பட்டுள்ளது என்றால் இல்லை. தற்போது காலியாக தான் உள்ளது. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில நஞ்சை பயிா' இருந்தது என்றால்சரிதான். அந்த பயிரை பிரதிவாதிகள் தான் பயிர்செய்தார்கள் எனற்ால் இல்லை. பிரதிவாதியை பயிர் செய்யவிடாமல் வயலுக்கு செல்லும் தண்ணிரை நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. நஞ்சை பயிருக்கு தண்ணிர் செல்லவிடாமல் தடுத்தாதல் தான் என்மீதும், எனது சகோதர, சகோதரிகள் மீதும்மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும்அந்த நடவடிக்கையில் இருந்து நான் தப்பிப்பதற்காக வேண்டி தான் இவ்வழக்ை கதாக்கல் செய்து'ளேள் னஎனறால் சரியல்ல. நான் சொல்வதை போனற் தனித்த அனுபவத்தில் தாவா சொத்தில்லைஎன்றால் சரியல்ல. நான் எந்த ஊரில் வசிக்கிறேன் எனறால் தற்போது பாளையங்கோட்டையில் எனது சொந்த வீட்டில் வசித்து வருகிறேன். நான் எவ்வளவு காலமாக பாளையங்கோட்டையில் வசிக்கிறேன்'எனறால் 2012ல் இருந்து வசிக்கிறேன். அதற்கு முன்பு வாடகை

வீட்டில் வசித்தேன் என்றால ஆமாம். நான் என்ன தொழில செய்கிறேன்எனறால் எலகட்ரிக் மற்றும் ப்ளமிங்க் வேலை செய்கிறேன. எவ்வளவு காலமாக செய்கிறேன்எனறால 2008 லிருந்து மேற்படி தொழில் செய்து வருகிறேன். பிரதிவாதி எனக்கு சித்தப்பா என்றால் சரிதான். பிரதிவாதிகு ஒரு கை ஊனம் என்று சொன்னால சரிதான். பிரதிவாதியை ஊனத்தை பயனப்டுத்தி பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனறால் சரியல்ல. வான் சொல்வதை போன்று பரிதிவாதிகள் எனக்கு எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தஙகராஜீன் சொத்துக்களை பொறுத்து எந்த காலத்திலும் அவருடைய தகப்பனாா காலத்திலும வாய்மொழிபாகம் ஏற்படவில்லைஎனறால் சரியல்ல. இன்றளவும் வழக்கு சொததுககள் மற்றும பாகபிரிவினை வழக்கில் உள்ள சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனனுடைய பெயரிலோ எனது தகப்பனார் பெயரிலோ ஏற்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் எந்த நாளும் எங்களுகக்கு உரிமையோ அனுபமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மோசடி ஆவணத்தின் மூலம் ஏற்பட்ட பட்டா நடைமுறையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.